செ.வெ. எண்: 211 நாள்: 20–03–2012

# செய்தி

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க**
**மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் தலைமையில்**
**அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும்**
**மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் தனி அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம்.**
**தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் கூட்டுறவுச் சங்கங்கள் அதன் பல்வேறு நடவடிக்கைகள் மூலம்**
**முதன் முறையாக ரூ.1,05,133 கோடி அளவை தாண்டி வியாபாரம் !**
**1.63 கோடி நபர்கள் பல்வேறு வகையில் பயன்பெற்றுள்ளனர் !!**

*******

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் இன்று (20.3.2012) அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் அனைத்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் தனி அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அப்போது இக்கூட்டத்தில், தமிழ்நாட்டில் 10,000க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் அதன் பல்வேறு வியாபார நடவடிக்கைகள் மூலம் முதன் முறையாக ரூ.1,05,133 கோடி அளவை தாண்டி வியாபாரம் செய்துள்ளது. இதன் மூலம் 1,62,71,779 நபர்கள் பல்வேறு வகையில் பயன்பெற்றுள்ளனர் என்றும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும் ரிசர்வ் வங்கியின் உரிமம் பெற்றுள்ளது. இந்திய அளவில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அளவில் ரிசர்வ் வங்கியின் உரிமம் பெற்ற இரண்டாவது மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், நடப்பாண்டு (2011–12) விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ரூ.3,000 கோடி அளவிற்கு குறுகியகால பயிர்க்கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் இதுவரை ரூ.2,990.90 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. இக்கடன்களை பெற்ற விவசாயிகள் பெற்ற பயிர்க்கடன்களை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தியதன் மூலம் மட்டும் 93,134 விவசாயிகள் அரசுமானியமாக ரூ.21.70 கோடி அளவிற்கு வட்டிச் சலுகை பெற்று பயன்பெற்றுள்ளனர்.

முதலீட்டுக் கடனாக ரூ.184.94 கோடியும், விவசாயிகளின் விளைபொருள்கள் மீதான தானிய ஈட்டுக் கடன் ரூ.72.29 கோடியும், விவசாயப் பெருமக்களுக்கு சிறுபாசனக் கடனாக ரூ.30.67 கோடியும், மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத் திறனை உயர்த்துவதற்காக ரூ.11.71 கோடியும், சிறுவணிகக் கடனாக ரூ.91.73 கோடியும், 125 நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக அனைத்து வகை கடன்கள் ரூ.4,933.35 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தொடக்க கூட்டுறவு வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலம் நடப்பாண்டில் நகைக்கடனாக ரூ.1,000 கோடி அளவிற்கு வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் இதுவரை ரூ.752.80 கோடி அளவிற்கு நகைக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக சுய உதவிக் குழுக்களுக்கு நடப்பாண்டில் ரூ.500 கோடி அளவிற்கு கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் இதுவரை ரூ.410.04 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

கூட்டுறவுத்துறையால் நடத்தப்படும் கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் தரமான மருந்துகளை 12% முதல் 15% வரை தள்ளுபடியில் வழங்குவதன் மூலம் நடுத்தர மற்றும் ஏழை எளிய மக்கள் குறைந்த விலையில் தரமான மருந்துகளை பெற்று பயன்பெறுகின்றனர்.

அனைத்து கூட்டுறவு வங்கிகள் மற்றும் சங்கங்களில் வைப்பீட்டினை அதிகரிக்க மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளின் காரணமாக தற்பொழுது மொத்த வைப்பீடு ரூ.29,111.67 கோடி அளவிற்கு உயர்ந்து சாதனை படைத்துள்ளது.

அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுவிநியோகத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை போதுமான அளவிற்கு இருப்பு வைத்துக்கொண்டு பொதுமக்களுக்கு தங்குதடையின்றி வழங்கிடவும், கட்டுப்பாடற்ற பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு விருப்பத்தின் அடிப்படையில் விற்பனை செய்திடவேண்டும் என தெரிவித்ததோடு நியாயவிலைக் கடைகளில் போலி குடும்ப அட்டைகள் கண்டறியப்பட்டால் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்தார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் திருமதி எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப., துணைச் செயலர் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.ப.அண்ணாமலை,இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு.செ.மனோகரன்,இ.ஆ.ப., திரு.நா.அசோகன், திரு.க.பு.பெ.பன்னீர்செல்வன், திரு.அ.சங்கரலிங்கம், திரு.கே.பாலசுப்பிரமணியம், திரு.இரா.ராஜேந்திரன், திரு.எம்.தர்மலிங்கம், திரு.ம.ப.சிவன் அருள் மற்றும் மண்டல இணைப்பதிவாளர்கள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் தனி அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: –**

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.